இம்மருந்துகளை எடுக்கும்போது வழக்கத்திற்கு மாறான பக்க-விளைவுகள் ஏதும் ஏற்பட்டால், மருத்துவரை உடனே பாருங்கள்.

## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை?

இந்த மருந்தை எடுப்பதற்கு முன்னால்,

- எந்த மருந்தாவது உங்களுக்கு ஒவ்வாமை ஏற்படுத்துமா என்று மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் தெரிவியுங்கள்.
- தற்சமயம் மருந்து ஏதாவது உட்கொண்டு வருகிறீர்களா என்பதையும் மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் தெரிவியுங்கள். குறிப்பாக மனஅழுத்தம், இருதய நோய் மருந்துகள், சளி மருந்துகள், தசை தளர்த்திகள், துாக்க மருந்து, அமைதிப்படுத்தும் மருந்து.
- தற்சமயம் மருத்துவப் பிரச்னை ஏதும் உங்களுக்கு உள்ளதா என்பதை மருத்துவரிடம் தெரிவியுங்கள். குறிப்பாக, நீரிழிவு, வலிப்பு, இரத்தக் கொதிப்பு, கண்களில் மிகை அழுத்தம் (glaucoma), இருதய மற்றும் இரத்தக்குழாய் தொடர்பான நோய்கள்.
- நீங்கள் தற்போது கர்ப்பமாக இருந்தால், கர்ப்பம் தரிக்க நினைத்திருந்தால் ,அல்லது தாய்ப்பால் கொடுத்து வந்தால் அதை மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

இந்த மருந்தை உட்கொண்ட பிறகு, வாயும் தொண்டையும் வரண்டு போகலாம். இதைத் தடுக்க, ஒவ்வொரு முறையும் மருந்து உட்கொண்ட பிறகு தண்ணீரால் வாயைக் கொப்பளிப்பது நல்லது.

## மருந்தை நான் எப்படி **வைத்திருக்க** வேண்டும்?

மாத்திரைகளை காற்று புகாத டப்பாவில் வைத்திருங்கள். அவற்றின்மீது வெப்பம், நேரடி சூரிய ஒளி படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.
இன்ஹேலரின் மருந்துக் குப்பியைக் கீறவோ, உடைக்கவோ அல்லது எரிக்கவோ கூடாது. அதிலுள்ள மருந்து முடிந்துவிட்ட பிறகும்கூட அவ்வாறு செய்யக் கூடாது.


Ministry of Health

National Healthcare Group

SingHealth



# நோயாளி தகவல் கையேடு



# ஆஸ்துமாவைப் போக்கும் மருந்துகள்

**Medicine To Relieve Asthma**

T25R0

## உங்கள் மருந்து பற்றிய தகவல்

ஆஸ்துமா நிவாரணத்திற்காக இந்த மருந்து உங்களுக்கு தரப்பட்டுள்ளது. நுரையீரலின் காற்று வழிகளை திறந்து விடுவதால் இவை புராங்கோடைலேட்டர்கள் (bronchodilators) என்று அழைக்கப்படுகின்றன.

| மருந்து | செயல் | கிடைக்கும் வகை |
|---|---|---|
| **குறுகிய நேரத்திற்கானது**<br>எ.கா.<br>சால்புடமால் (Salbutamol) (வென்டொலின்)<br>டெர்புட்டலைன் (Terbutaline) (பிரிகனைல் -Bricanyl)<br>ஃபெனோடெரால் (Fenoterol) (பெரோடெக்-Berotec) | இவை நுரையீரலின் காற்று வழிகளைத் திறந்து விடுகின்றன. நுரையீரலுக்குள் அதிகமான காற்று செல்வதால், மூச்சிழைப்பு, மூச்சுத் திணறல், சுவாசப் பிரச்னைகள் நீங்குகின்றன. இம்மருந்துகள் நிவாரணிகளாகப் பயன்படுகின்றன. | இந்த மருந்து இன்ஹேலர் மற்றும்/ அல்லது மாத்திரை, மற்றும் சிரப் வடிவத்தில் கிடைக்கிறது. |
| **நீண்ட நேரத்திற்கானது**<br>எ.கா.<br>பேம்புட்டரால் (Bambuterol) (பேம்பெக்-Bambec)<br>பார்மோட்டெரால் (Formoterol) (ஆக்சிஸ் Oxis) | | |

## மருந்தை நான் எப்படி உட்கொள்ள வேண்டும்?

மருந்தை மருத்துவர் கூறியபடியே உட்கொள்ள வேண்டும். மருந்தைச் சரியான முறையில் எடுக்கத் தெரியவில்லையென்றால், மருந்தாளர் அல்லது மருத்துவரைக் கேளுங்கள்.

இந்த மருந்தை உங்களுக்குக் கூறப்பட்டுள்ளதுபடியே உட்கொள்ள வேண்டும். மருத்துவரின் அனுமதி இல்லாமல் மருந்தின் அளவைக் கூட்டாதீர்கள் மற்றும் மருந்தை அடிக்கடி எடுக்காதீர்கள். அப்படிச் செய்யத் தேவை ஏற்பட்டால், முதலில் மருத்துவரைக் கேளுங்கள். அப்படிச் செய்வது,ஆஸ்துமா இன்னும் நன்கு கட்டுப்படவில்லை என்பதைக் குறிக்கலாம்.

காலாவதியான அல்லது இனிமேல் உட்கொள்ளத் தேவைப்படாத மருந்துகளை உடனே வீசிவிடுங்கள்

நோயாளி தகவல் கையேடு । **ஆஸ்துமாவைப் போக்கும் மருந்துகள்**

இம்மருந்துகள் சிலவற்றில், மருந்தை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்ற விவரம் கூறப்பட்டிருக்கும். மருந்தை எடுப்பதற்கு முன்பு இந்த மருந்து விவரக் குறிப்பைக் கவனமாகப் படியுங்கள். இன்ஹேலரைச் சரியாகப் பயன்படுத்துவது மிக முக்கியம். அப்போதுதான் மருந்து நுரையீரலை சரியாக அடைந்து நன்கு வேலை செய்யும்.

இந்த மருந்தை 2 மணி நேரத்திற்கு ஒரு முறை எடுத்த பிறகும் மூச்சு விடுவது சிரமமாக இருந்தால், அல்லது நிலைமை மேலும் மோசமடைந்தால், உடனே மருத்துவரைப் பாருங்கள்.

இன்ஹேலரிலிருந்து மருந்தை நுரையீரலுக்குள் செலுத்துவது சிரமமாக இருந்தால், அதற்குரிய சிறப்புச் சாதனம் ஒன்றை இன்ஹேலரில் பொருத்திக் கொள்ளலாம். இது குறித்து உங்கள் மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் விசாரியுங்கள்.

## மருந்து உட்கொள்ள நான் மறந்துவிட்டால் என்ன செய்வது?

மருந்தை முறையாகப் பயன்படுத்தி வரும்போது, ஒரு வேளைக்குரிய மருந்தை எடுக்கத் தவறிவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே அதை உட்கொள்ளுங்கள். அந்த நாளுக்கான மீதி மருந்தை, முறையான இடைவெளி விட்டு முடித்துவிடுங்கள். முதலில் எடுக்க மறந்துவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு உட்கொள்ளாதீர்கள்.

## இம்மருந்து ஏற்படுத்தக்கூடிய பக்க-விளைவுகள் யாவை?

பக்க-விளைவுகள் பொதுவாக இருக்காது என்றாலும், அவை ஏற்படக்கூடிய சாத்தியமும் உள்ளது. பக்க-விளைவுகள் முதலில் இருந்தாலும், மருந்துக்கு உடல் பழகிக் கொண்டுவரும்போது அவை பொதுவாக மறைந்துவிடும். எனினும், கீழ்க்காணும் பக்க-விளைவுகள் நீடித்தாலோ, அல்லது தொந்தரவு கொடுத்தாலோ, மருத்துவரிடம் ஆலோசனை பெறுங்கள்.

- பதற்றம் அல்லது அமைதியின்மை
- உடல் நடுக்கம்
- மிக விரைவான இருதயத் துடிப்பு
- தலைச்சுற்றல்
- தொண்டை வரண்டு உறுத்துதல்
- குமட்டல் அல்லது வாந்தி
- தலைவலி

மருந்துகளை எப்போதுமே பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாதவாறு வைத்திருக்கவும்